M

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம்: 3.00 மணி

மதிப்பெண்கள்: 200

பகுதி - அ

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 30 x 1 = 30

**A. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. அடக்கவிலை அல்லது _____ விலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.
2. இருப்புநிலைக் குறிப்பில் கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு _______ லிருந்து கழித்து காட்டுதல் வேண்டும்.
3. 31.3.2008 இருப்பாய்வில் 1.4.07 முதல் வங்கிக் கடன் ரூ.8,00,000/. வட்டி வீதம் ஆண்டுக்கு 8% செலுத்தியது ரூ.40,000 31.3.2008 அன்று நிலுவையிலுள்ள வட்டி ரூ. _______.
4. நிலை அறிக்கை முறை _______ முறை என்றும் அழைக்கப்படும்.
5. _______ முறையில் ஆள்சார் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படும்.
6. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட _______ முறை பயன்படுத்தப்படுகிறது.
7. இயந்திரத்தின் விற்பனை விலை ரூ.5,00,000/- விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ.58,000 எனில், இயந்திரத்தின் ஏட்டு மதிப்பு ரூ._______.
8. _______ விகிதங்கள் நிறுவனத்தின் நடப்பு செலுத்துகை திறனை அளவிடுகின்றது.
9. மொத்த இலாபத்திற்கும், விற்பனைக்கும் இடையேயான உறவே _______ எனப்படுகிறது.
10. ரொக்கத் திட்டப்பட்டியல் _______ என்றும் அழைக்கப்படுகிறது.
11. _______ முதல் ஏற்பாட்டில் நடப்புக் கணக்குகள் தயாரிக்கப்பட மாட்டாது.
12. நற்பெயர் ஒரு _______ சொத்து.
13. பகிர்ந்து தரா இலாபம் இருப்புநிலைக் குறிப்பின் _______ பக்கத்தில் தோன்றும்.
14. காப்பு முதல் _______ போது மட்டும் வெளியிடப்படும்.
15. இரு அழைப்புகளுக்கிடையே இருக்க வேண்டிய கால இடைவெளி _______ ஆகும்.

**B. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

16. நிகர இலாபம் மாற்றப்படும் கணக்கு
    a) முதல் கணக்கு  b) இலாபநட்ட கணக்கு  c) இவற்றுள் ஏதுமில்லை
17. எடுப்பு மீதான வட்டி கழிக்கப்படுவது
    a) வருமானத்திலிருந்து  b) முதலிலிருந்து  c) செலவிலிருந்து
18. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு  a) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
    b) மொத்த கடனீந்தோர் கணக்கு  c) மொத்த கடனாளிகள் கணக்கு
19. வியாபாரத்திலுள்ள முதலினை அறிய தயாரிக்கப்படுவது _______.
    a) வியாபார கணக்கு  b) இலாபநட்ட கணக்கு  c) நிலையறிக்கை
20. நிலைச் சொத்தை விற்பதால் ஏற்படும் இலாபம் பற்று செய்யப்படும் கணக்கு _______.
    a) இலாப நட்ட கணக்கு  b) நிலைச் சொத்து கணக்கு  c) தேய்மானக் கணக்கு
21. சொத்தின் அடக்கம் ரூ.20,000. இறுதி மதிப்பு ரூ.2,000. பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள் நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம்
    a) 11%  b) 10%  c) 9%
22. ஒரு நிறுவனத்தின் நடப்பு சொத்துக்கள் ரூ.60,000 மற்றும் நடப்புப் பொறுப்புக்கள் ரூ.30,000 எனில் நடப்பு விகிதம் _______ ஆகும்.
    a) 1 : 2  b) 1 : 1  c) 2 : 1
23. அனைத்து வகையுடைமை விகிதங்களும் _______ ஆல் கொடுக்கப்படும்.
    a) விகிதாச்சாரம்  b) மடங்கு  c) சதவீதம்
24. திட்டப்பட்டியல் வெளிப்படுத்துவது _______.
    a) அலகுகளின் எண்ணிக்கை  b) பணம்  c) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
25. நிலை முதல் முறையில் கூட்டாளிகளின் இலாப நட்டங்கள் அவர்களின் _______ கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
    a) முதல்  b) நடப்பு  c) இருப்பு
26. கூட்டாளி விலகலில் கணக்கிடப்படுவது _______.
    a) ஆதாய விகிதம்  b) முதல் விகிதம்  c) தியாக விகிதம்
27. வெளிச் செல்லும் கூட்டாளிகளுக்கு சேர வேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில் அத்தொகை மாற்றப்படும் கணக்கு _______.
    a) முதல் கணக்கு  b) கடன் கணக்கு  c) ரொக்க கணக்கு

28. பதிவுற்ற முதலின் மற்றொரு பெயர் ______.
   a) பெயரளவு முதல்   b) அழைப்பு முதல்   c) காப்பு முதல்
29. வெளியிட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட குறைவாக விண்ணப்பங்கள் பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டால் அதனை _____ என்று அழைக்கலாம்.
   a) மிகை ஒப்பம்   b) குறை ஒப்பம்   c) முழு ஒப்பம்
30. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும் போது அந்நிறுவனத்தின் பங்கு முதல் ______.
   a) குறையும்   b) கூடும்   c) சமமாக இருக்கும்

பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி: 10 x 5 = 50

31. முன் செலுத்திய செலவுகள் என்றால் என்ன?
32. தேய்மானத்தின் இலக்கணம் தருக.
33. எறி மதிப்பு என்றால் என்ன?
34. நடப்பு விகிதம் என்றால் என்ன?
35. ரொக்கப் பெறுதல்களுக்கு ஐந்து உதாரணம் தருக.
36. விகித நெறி அடிப்படை ஒதுக்கீடு என்றால் என்ன?
37. உயர் இலாபம் என்றால் என்ன?
38. 31.03.09 இருப்பாய்வின்படி அறைகலன் மதிப்பு ரூ.80,000/-. சரிக்கட்டுதல் - அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். சரிக்கட்டு மற்றும் மாற்றுப் பதிவுகள் தருக.
39. விடுபட்ட தகவலைத் தருக.
   இறுதி முதல் ரூ.60,000; எடுப்பு ரூ.12,000; அவ்வாண்டில் இட்ட கூடுதல் முதல் ரூ.20,000; அவ்வாண்டிற்குரிய இலாபம் ரூ.25,000. தொடக்க முதல் ______?
40. நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.
   இயந்திரத்தின் அடக்கவிலை ரூ.2,30,000; நிறுவுகைச் செலவுகள் ரூ.20,000; பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். எறிமதிப்பு ரூ.65,000/-
41. பின்வரும் விவரங்களைக் கொண்டு நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் கணக்கிடுக.
   நிலைச் சொத்துக்கள் ரூ.3,00,000; மொத்த விற்பனை ரூ.8,50,000; தேய்மானம் ரூ.1,00,000; விற்பனைத் திருப்பம் ரூ.50,000
42. ஜனவரியில் தொடக்க இருப்பு ரூ.12,000. மேலும் ஜனவரியில் எதிர்பார்க்கும் பெறுதல்கள் ரூ.24,000 மற்றும் செலுத்தல்கள் ரூ.16,000. அம்மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு என்ன?
43. சங்கர், சைமன் என்ற கூட்டாளிகள் முறையே 3:2 என்ற விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் சலீம் என்பவரை 1/3 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாப விகிதம் காண்க.
44. ராம் வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 40000 பங்குகளை 10% முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.

பகுதி - இ

III. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி: *(வினா எண். 45 கட்டாய வினா)* 5 x 12 = 60

45.a) 31.3.09 ல் இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.2,50,000.
   சரிக்கட்டுதல்கள் : i) ரூ.20,000 வராக் கடன் போக்கெழுதுக ii) பற்பல கடனாளிகள் மீது 5% வராக் கடன் ஒதுக்கு உருவாக்குக. iii) கடனாளிகள் மீது 3% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக. சரிக்கட்டுப் பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக. *(அல்லது)*

b) திரு.சங்கர் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருந்தார். 31.3.04 மற்றும் 31.3.05 ல் அவரது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கீழ்க்கண்டவாறு இருந்தது.

| | *31.3.05 ரூ.* | *31.3.06 ரூ.* |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | 60,000 |
| அறைகலன் | 20,000 | 30,000 |
| பற்பல கடனாளிகள் | 1,50,000 | 2,00,000 |
| சரக்கிருப்பு | 60,000 | 70,000 |
| ரொக்க இருப்பு | 10,000 | 70,000 |

அவர் அவ்வாண்டில் ரூ.25,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவிற்காக ரூ.80,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 05ம் ஆண்டில் அவரது இலாப நட்டம் காண்க.

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
47. ரொக்கத்திட்டப்பட்டியல் என்றால் என்ன? அதன் தன்மைகள் மற்றும் நன்மைகள் யாவை?
48. தியாக விகிதம் மற்றும் ஆதாய விகிதம் - வேறுபடுத்துக.

49. ஒரு ஆடை தயாரிப்பு நிறுவனம் 1.4.08 ல் ரூ.3,80,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ.2,60,000 க்கு விற்கப்பட்டது. ஆண்டுதோறும் 10% நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. ஆண்டுதோறும் கணக்குகள் மார்ச் 31ல் முடிக்கப்படுகிறது. இயந்திரக் கணக்குகளையும், தேய்மானக் கணக்கையும் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.

50. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து நடப்பு விகிதம், நீர்மை விகிதம் மற்றும் துல்லிய நீர்மை விகிதம் கணக்கிடுக. ரொக்கம் ரூ.16,000; கடனாளிகள் ரூ.1,54,000; இறுதி சரக்கிருப்பு ரூ.1,70,000; செலுத்தற்குரிய மா.சீட்டுகள் ரூ.30,000; கடனீந்தோர் ரூ.1,20,000; கொடுபட வேண்டிய செலவுகள் ரூ.10,000; வங்கி மேல்வரைப்பற்று ரூ.10,000

51. சங்கர், கண்ணன் ஆகிய இருவர் கூட்டாண்மை வியாபாரத்தில் 3:2 என்ற விகிதத்தில் கூட்டாளிகளாக உள்ளனர். அவர்களின் முதல் முறையே ரூ.80,000, ரூ.60,000. முதல் மீதான வட்டி ஆண்டுக்கு 8%. எடுப்பு மீதான வட்டி சங்கர் ரூ.750, கண்ணன் ரூ.500. சங்கர், கண்ணன் முறையே ரூ.15,000, ரூ.10,000 எடுத்துள்ளனர். சங்கருக்கு ஆண்டு ஊதியம் ரூ.12,000, கண்ணன் ரூ.4,200 கழிவாகவும் பெறுகின்றனர். மேற்கண்ட சரிக்கட்டுதல்களுக்கு முன் தொழிலின் நிகர இலாபம் ரூ.60,000. இலாப நட்ட பகிர்வு கணக்கும், கூட்டாளிகளின் முதல் கணக்கும் தயாரிக்கவும்.

52. ஜெம் வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ.10 மதிப்புடைய 3000 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்பு தொகையான ரூ.2 செலுத்தாத காரணத்தால் ஒறுப்பிழப்பு செய்தனர். மேலும் இப்பங்குகள் ரூ.25,000 க்கு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து ஒறுப்பிழப்பு மற்றும் முதலின காப்பிற்கான பேரேட்டுக் கணக்குகளை தயார் செய்க.

## பகுதி - ஈ

**IV. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 53 கட்டாய வினா)* 3 x 20 = 60

53.a) திரு.செந்தில் என்பவர் முழுமை பெறாத இரட்டைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்திருந்தார். கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31.3.08 நாளைய வியாபார இலாப நட்ட குறிப்பும், இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்கவும்.

| | *1.4.07 ரூ.* | *31.3.08 ரூ.* |
|---|---|---|
| ரொக்கம் | 6,250 | 10,000 |
| அறைகலன் | 2,500 | 2,500 |
| பற்பல கடனாளிகள் | 62,500 | 87,500 |
| சரக்கிருப்பு | 25,000 | 12,500 |
| பற்பல கடனீந்தோர் | 37,500 | 43,750 |

<u>மற்ற விபரங்கள்</u>: எடுப்புக்கள் ரூ.10,000; பெற்ற தள்ளுபடி ரூ.3,750; அளித்த தள்ளுபடி ரூ.2,500; கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.1,35,000; கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் ரூ.1,12,500; விற்பனைத் திருப்பம் ரூ.3,750; கொள்முதல் திருப்பம் ரூ.1,250; பல்வகைச் செலவுகள் ரூ.8,750; அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும். *(அல்லது)*

b) அசுவினி, பரணி, கிருத்திகை என்ற கூட்டாளிகள் முறையே 3:2:1 என்ற விகிதத்தில் இலாப-நட்டங்களை பகிர்ந்து வந்தனர். இவர்களின் 31.3.09ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| *பொறுப்புக்கள்* | *ரூ.* | *சொத்துக்கள்* | *ரூ.* |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | வங்கி ரொக்கம் | 1,88,000 |
| செலுத்தற்குரிய மா.சீட்டு | 50,000 | பற்பல கடனாளிகள் | 62,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 80,000 | அறைகலன் | 80,000 |
| பொதுக்காப்பு | 1,20,000 | பொறித்தொகுதி | 1,60,000 |
| <u>முதல் கணக்குகள்</u>: | | நிலம் கட்டிடம் | 2,80,000 |
| அசுவினி | 2,40,000 | சரக்கிருப்பு | 1,30,000 |
| பரணி | 1,60,000 | | |
| கிருத்திகை | 1,20,000 | | |
| | 9,00,000 | | 9,00,000 |

பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்ட கிருத்திகை 1.4.09 ல் விலகினார்.

i) நற்பெயர் ரூ.1,44,000 என மதிப்பிடப்பட்டது.; ii) அறைகலன் மீது ரூ.12,000 தேய்மானம் நீக்க வேண்டும். நிலம் கட்டிடம் ரூ.40,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.; iii) கொடுபடா பழுது பார்ப்பு செலவுகள் ரூ.4,000 ஒதுக்க வேண்டும். iv) கிருத்திகைக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக கொடுக்கப்பட வேண்டும். மறு மதிப்பீட்டு கணக்கு, முதல் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பை தயாரிக்கவும்.

54. திரு.செல்வம் என்பவரது கீழ்க்கண்ட இருப்பாய்விலிருந்து 31.3.09 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

31.3.09 ல் இருப்பாய்வு

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ |
|---|---|---|---|
| பொதுச் செலவுகள் | 16,500 | முதல் | 1,20,000 |
| கை ரொக்கம் | 2,500 | பெற்ற கழிவு | 11,000 |
| அறைகலன் | 80,000 | வங்கி மேல்வரைப்பற்று | 25,000 |
| கூலி | 50,000 | விற்பனை | 5,00,000 |
| கொள்முதல் | 3,00,000 | கடனீந்தோர் | 60,000 |
| எடுப்புக்கள் | 16,000 | செ.மாற்று சீட்டு | 24,000 |
| தொடக்க சரக்கிருப்பு | 1,00,000 | | |
| காப்பீட்டு முனைமம் | 1,000 | | |
| கடனாளிகள் | 1,50,000 | | |
| சம்பளம் | 15,000 | | |
| பெ.மாற்று சீட்டுகள் | 9,000 | | |
| | 7,40,000 | | 7,40,000 |

<u>சரிக்கட்டுதல்கள்</u>: a) 31.3.09 ல் சரக்கிருப்பு ரூ.40,000 b) கொடுபட வேண்டிய கூலி ரூ.5,000
c) முன் செலுத்திய காப்பீடு ரூ.500 d) அறைகலன் மீது தேய்மானம் 5% அனுமதிக்க.
e) எடுப்பு மற்றும் முதல் மீதான வட்டி தலா 8% அனுமதிக்க.

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து அ) நடப்பு விகிதம் ஆ) நீர்மை விகிதம் இ) புற அக பொறுப்புகள் விகிதம் ஈ) உரிமையாளர் விகிதம் கணக்கிடுக.

31.3.09 ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புக்கள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 40,000 | நிலைச் சொத்துக்கள் | 60,000 |
| காப்புக்கள் | 20,000 | நற்பெயர் | 20,000 |
| கடன்கள் | 20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| கடனீந்தோர் | 20,000 | கடனாளிகள் | 8,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 20,000 | பெறுதற்குரிய மா.சீட்டுகள் | 4,000 |
| | | ரொக்கம் | 8,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

56. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து 2009 மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலை தயாரிக்கவும்.

| மாதங்கள் | கடன் விற்பனை ரூ. | கடன் கொள்முதல் ரூ. | அலுவலகச் செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி 09 | 7,500 | 15,000 | 12,000 |
| பிப்ரவரி 09 | 20,000 | 13,500 | 13,500 |
| மார்ச் 09 | 48,500 | 17,500 | 16,500 |
| ஏப்ரல் 09 | 22,500 | 12,000 | 7,000 |
| மே 09 | 9,000 | 14,000 | 8,000 |

a) 1.3.09 ல் கையிருப்பு ரொக்கம் ரூ. 8,000. b) சரக்களித்தோர் அனுமதித்த கடன் காலம் 2 மாதங்கள்
c) வாடிக்கையாளருக்கு அனுமதித்த கடன் காலம் ஒரு மாதம் d) அலுவலகச் செலவுகள் அந்த மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும். e) மே மாதம் செலுத்த வேண்டிய வட்டி ரூ.500

57. சிவா வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 20000 பங்குகளை ரூ.10 முனைமத்தில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் போது ரூ.30; ஒதுக்கீட்டின் போது ரூ.40 (முனைமம் உள்ளிட்டது)
முதலாவது அழைப்பின் போது ரூ.20 இறுதி அழைப்பின் போது ரூ.20

18000 பங்குகள் ஒப்பப்பட்டது. அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு, வங்கிக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

-----